செ.வெ.எண்: 846　　　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 17.12.2019

**புதுக்கோட்டை அரசு பள்ளி மாணவி நாசா விண்வெளி மையத்தை பார்வையிட செல்ல மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஓஎன்ஜிசி நிறுவன அலுவலர்கள் சார்பில் மாணவியிடம் முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.**

---

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்தை பார்வையிடுவதற்காக தேசிய அளவில் தேர்வு செய்யப்பட்ட புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி கே.ஜெயலட்சுமிக்கு ஓஎன்ஜிசி நிறுவன அலுவலர்கள் சார்பில் 17.12.2019 இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பயண செலவிற்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்தை பார்வையிடுவதற்கு இந்திய அளவில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு (Biology பாடப்பிரிவு) பயிலும் மாணவி கே.ஜெயலட்சுமி கடந்த 11.12.2019 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்ற போது தான் அமெரிக்கா சென்றுவர நிதியுதவி தேவைப்படுவதாக தெரிவித்தார்.

இதையடுத்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க எண்ணை மற்றும் எரிவாயுக்கழகத்தில் (ஓ.என்.ஜி.சி) பணிப்புரியும் அலுவலர்கள்

ஒன்றிணைந்து முதற்கட்டமாக மாணவி கே.ஜெயலட்சுமிக்கு அமெரிக்கா சென்றுவர தேவைப்படும் நிதியில் 65,000 ரூபாயை முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

இந்நிதியினை ஓ.என்.ஜி.சி நிறுவன அலுவலர்கள் சார்பில் அதன் துணை பொது மேலாளர் (மனிதவளம்) திரு.ச.ஜோசப்ராஜ் அவர்கள் இன்று (17.12.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாணவிக்கு வழங்கினார்.

இதனை தொடர்ந்து மாணவி ஜெயலட்சுமி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு.ச.ஜோசப்ராஜ் அவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் த.விஜயலெட்சுமி, இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியை அ.பெட்லராணி ஆகியோர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**